# மாதாந்த வர்த்தகச் செய்தித்திரட்டு

## பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்

இலங்கை மத்திய வங்கி

2023 செத்தெம்பர்

தொகுதி 05 வெளியீடு 09


## முக்கிய பண்புகள்

### மாதாந்த ஏற்றுமதிச் செயலாற்றம்




2023 செத்தெம்பரில் வணிகப்பொருட்கள் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 972 மில்லியனிற்கு 10 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தன.

### மாதாந்த இறக்குமதிச் செயலாற்றம்




2023 செத்தெம்பரில் வணிகப்பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 1,349 மில்லியனிற்கு 5.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) அதிகரித்தது.

### ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வளர்ச்சி வீதங்கள் (%)




2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் ஏற்றுமதி வருவாய்கள் 10.1 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வீழ்ச்சியடைந்தவேளையில் இறக்குமதிச் செலவினமும் 12.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

### வர்த்தக மீதி (ஐ.அ.டொ. மில்)




வணிகப்பொருள் வர்த்தகக் கணக்குப் பற்றாக்குறையானது 2022 செத்தெம்பரில் பதிவுசெய்யப்பட்ட ஐ.அ.டொலர் 205 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2023 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 378 மில்லியனிற்கு விரிவடைந்தது.

## முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வகைகள் (2023 சன-செத்)



# ஏற்றுமதிச் செயலாற்றம்

### ஏற்றுமதிச் செயலாற்றம் (சன-செத்)




### ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் (சன-செத்)




மெதுவடைந்து செல்கின்ற வெளிநாட்டுக் கேள்வியுடன் இணைந்து கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன.

2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் ஏற்றுமதி அளவுச் சுட்டெண் 2.2 சதவீதத்தினால் மேம்பட்டவேளையில் அலகுப் பெறுமதிச் சுட்டெண் 12 சதவீதத்தினால் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது.

## வேளாண்மை ஏற்றுமதிகள்

### வேளாண்மை ஏற்றுமதிகள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




### வேளாண்மை ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-செத்)




### தேயிலை மற்றும் இறப்பர் விலைகள்*




*2022 யூலை மாதத்திற்கான இறப்பர் (நாடாவாக்கப்பட்டு புகையூட்டப்பட்ட தட்டை இறப்பர்) விலைகள் ஏலத்தில் குறித்துரைக்கப்படவில்லை.

தேயிலை மற்றும் வாசனைத்திரவியங்கள் என்பவற்றின் ஏற்றுமதிகளிலிருந்தான உயர்ந்தளவிலான வருவாய்களினால் உந்தப்பட்டு, 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் வேளாண்மை ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் சிறிதளவு மேம்பட்டன. மாறாக, இக்காலப்பகுதியில் தெங்குடன் தொடர்புடைய உற்பத்திகள், கடலுணவு மற்றும் இயற்கை இறப்பர் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் வீழ்ச்சியடைந்தன.

# கைத்தொழில் ஏற்றுமதிகள்

## கைத்தொழில் ஏற்றுமதிகள்




## கைத்தொழில் ஏற்றுமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




## கைத்தொழில் ஏற்றுமதிகளின் செயலாற்றம் (சன-செத்)




## நீர்க்கல மற்றும் வானூர்தி மற்றும் எரிபொருட்களின் ஏற்றுமதி விலைகள்




ஆடைகளின் வீழ்ச்சியினால் குறிப்பிடத்தக்களவிற்கு பங்களிக்கப்பட்டு, கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் வீழ்ச்சியடைந்தன. மேலும், இறப்பர் உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள், இரசாயன உற்பத்திகள், மற்றும் மரம் மற்றும் தாள் உற்பத்திகள் என்பவற்றின் ஏற்றுமதிகளில் குறிப்பிடத்தக்களவிலான வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டன. இருப்பினும், இக்காலப்பகுதியில் இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள், பொறி மற்றும் இயந்திரவியல் சாதனங்கள், மற்றும் போக்குவரத்துச் சாதனங்கள் என்பவற்றிலிருந்தான ஏற்றுமதி வருவாய்களில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

# இறக்குமதிச் செயலாற்றம்

## இறக்குமதிச் செயலாற்றம் (சன-செத்)




## இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் (சன-செத்)




நுகர்வுப் பொருட்கள் மீதான செலவினங்களில் ஏற்பட்ட அதிகரிப்பொன்றிற்கு மத்தியில் இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் மீது உறப்பட்ட தாழ்ந்தளவிலான செலவினங்களின் காரணமாக 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் வணிகப்பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, இறக்குமதி அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள் என்பன முறையே 0.9 சதவீதத்தினாலும் 11.7 சதவீதத்தினாலும் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் வீழ்ச்சியடைந்தன.

# நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள்

## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகள்




## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




## நுகர்வுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றம் (சன-செத்)




## சீனி, தானியங்கள் மற்றும் பால்மாவின் சராசரி இறக்குமதி விலைகள்




மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்களினால் உந்தப்பட்டு உணவல்லா நுகர்வுப் பொருட்களின் அதிகரித்த இறக்குமதிகளின் முக்கிய காரணமாக 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் அதிகரித்தது. பரிசீலனையிற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில், தானியங்கள் மற்றும் ஆலையிடும் கைத்தொழில் உற்பத்திகள் (அரிசி) மீதான செலவினம் வீழ்ச்சியடைந்தபோதிலும் சீனி, எண்ணெய் மற்றும் கொழுப்புக்கள் என்பவற்றின் இறக்குமதி மீதான உயர்ந்தளவிலான செலவினத்துடன் உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினமும் அதிகரித்தது.

# இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள்

## இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகள் மீதான செலவினம்




## இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்



## இடைநிலைப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செயலாற்றும் (சன-செத்)




## மசகெண்ணெய் மற்றும் வளமாக்கியின் இறக்குமதி விலைகள் (மாதாந்த சராசரி)




*2022 மார்ச், ஏப்பிறல், யூன், யூலை மற்றும் ஒத்தோபர் மற்றும் 2023 பெப்புருவரி மற்றும் செத்தெம்பர் ஆகிய மாதங்களில் மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்படவில்லை.

புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், எரிபொருள், பிளாத்திக்கு மற்றும் அதன் பொருட்கள் மற்றும் இரசாயன உற்பத்திகள் என்பவற்றின் தாழ்ந்தளவிலான இறக்குமதிகளின் முதன்மைக் காரணமாக 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் இடைநிலைப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் (ஆண்டிற்கு ஆண்டு) அடிப்படையில் வீழ்ச்சியடைந்தது. இருப்பினும், தொடர்புடைய காலப்பகுதியில் கோதுமை, வளமாக்கிகள், மற்றும் வைரங்கள் மற்றும் அருங்கற்கள் மற்றும் உலோகங்கள் என்பன மீதான இறக்குமதிச் செலவினம் அதிகரித்துக் காணப்பட்டது.

# முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகள்

## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் மீதான செலவினம்




## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் அளவு மற்றும் அலகுப் பெறுமதிச் சுட்டெண்கள்




## முதலீட்டுப் பொருட்கள் இறக்குமதிகளின் செயலாற்றும் (சன-செத்)




பொறி மற்றும் சாதனங்கள், கட்டடவாக்கப் பொருட்கள் மற்றும் போக்குவரத்து சாதனங்கள் ஆகிய சகல முக்கிய முதலீட்டுப் பொருள் வகைகளிலும் ஏற்பட்ட தாழ்ந்தளவிலான இறக்குமதிச் செலவினத்தின் காரணமாக 2023 செத்தெம்பரில் முடிவடைகின்ற ஒன்பது மாத காலப்பகுதியில் முதலீட்டுப் பொருட்கள் மீதான இறக்குமதிச் செலவினம் வீழ்ச்சியடைந்தது.

# வெளிநாட்டு வர்த்தகப் புள்ளிவிபரங்களின் தொகுப்பு (அ)

## ஏற்றுமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 செத் | 2023 செத் | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-செத் | 2023 சன-செத் | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | | **231.2** | **242.5** | **4.9** | **1,939.8** | **1,945.4** | **0.3** |
| இதில் | தேயிலை | 117.8 | 120.0 | 1.8 | 937.1 | 990.3 | 5.7 |
| | தெங்கு | 29.7 | 32.4 | 9.2 | 314.0 | 256.4 | -18.3 |
| | வாசனைத்திரவியங்கள் | 40.6 | 37.8 | -6.7 | 274.1 | 298.5 | 8.9 |
| | கடலுணவு | 17.0 | 25.7 | 51.3 | 205.3 | 193.0 | -6.0 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | | **843.7** | **724.3** | **-14.2** | **8,011.5** | **6,997.9** | **-12.7** |
| இதில் | புடவைகள் மற்றும் ஆடைகள் | 481.5 | 363.0 | -24.6 | 4,577.2 | 3,688.7 | -19.4 |
| | இறப்பர் உற்பத்திகள் | 78.9 | 80.6 | 2.2 | 755.1 | 668.6 | -11.5 |
| | பெற்றோலிய உற்பத்திகள் | 30.0 | 45.7 | 52.3 | 439.9 | 371.4 | -15.6 |
| | உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை | 39.8 | 43.2 | 8.6 | 405.8 | 397.7 | -2.0 |
| | பொறி மற்றும் எந்திரவியல் சாதனங்கள் | 52.0 | 46.9 | -9.9 | 427.9 | 465.5 | 8.8 |
| | இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரணங்கள் | 47.9 | 41.3 | -13.9 | 336.5 | 394.3 | 17.1 |
| | தோல், பயணப்பொருட்கள் மற்றும் காலணிகள் | 9.4 | 7.3 | -21.9 | 63.6 | 55.1 | -13.4 |
| **கனிமம் மற்றும் ஏனைய ஏற்றுமதிகள்** | | **4.9** | **4.9** | **1.3** | **40.7** | **38.5** | **-5.5** |
| **மொத்த ஏற்றுமதிகள்** | | **1,079.8** | **971.7** | **-10.0** | **9,992.0** | **8,981.8** | **-10.1** |

## இறக்குமதிச் செயலாற்றம் (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | | 2022 செத் | 2023 செத் | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-செத் | 2023 சன-செத் | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | | **201.1** | **214.2** | **6.5** | **2,146.7** | **2,242.5** | **4.5** |
| **உணவு மற்றும் குடிபானங்கள்** | | 121.5 | 108.6 | -10.7 | 1,227.7 | 1,266.6 | 3.2 |
| இதில் | காய்கறிகள் (ஆ) | 23.5 | 23.9 | 1.7 | 249.7 | 271.3 | 8.6 |
| | அரிசி | 24.9 | 1.0 | -95.9 | 254.5 | 14.2 | -94.4 |
| **உணவல்லா நுகர்வுப் பொருட்கள்** | | 79.6 | 105.7 | 32.8 | 919.0 | 976.0 | 6.2 |
| இதில் | மருந்து மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் | 44.5 | 45.2 | 1.5 | 392.0 | 511.4 | 30.5 |
| **இடைநிலைப் பொருட்கள்** | | **913.4** | **919.8** | **0.7** | **9,497.4** | **8,105.3** | **-14.7** |
| இதில் | எரிபொருள் | 376.4 | 396.7 | 5.4 | 3,694.3 | 3,476.3 | -5.9 |
| | புடவை மற்றும் புடவைப் பொருட்கள் | 231.5 | 176.6 | -23.7 | 2,407.2 | 1,760.6 | -26.9 |
| | வளமாக்கிகள் | 6.3 | 22.0 | 249.7 | 104.5 | 161.8 | 54.8 |
| | கோதுமை மற்றும் சோளம் | 18.2 | 62.2 | 240.6 | 188.5 | 264.0 | 40.1 |
| **முதலீட்டுப் பொருட்கள் மற்றும் ஏனையவை** | | **169.9** | **215.3** | **26.7** | **2,441.1** | **1,975.6** | **-19.1** |
| இதில் | பொறி மற்றும் சாதனம் | 108.3 | 136.7 | 26.2 | 1,570.7 | 1,355.7 | -13.7 |
| **மொத்த இறக்குமதிகள்** | | **1,284.4** | **1,349.3** | **5.1** | **14,085.2** | **12,323.4** | **-12.5** |

## வர்த்தக நிலுவை (ஐ.அ.டொ. மில்)

| விடயம் | 2022 செத் | 2023 செத் | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-செத் | 2023 சன-செத் | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|
| **வர்த்தக நிலுவை** | -204.5 | -377.5 | | -4,093.3 | -3,341.5 | |

## வர்த்தகச் சுட்டெண்கள் மற்றும் வர்த்தக மாற்று விகிதம் (2010 = 100) (இ)

| விடயம் | | 2022 செத் | 2023 செத் | ஆ-ஆ. மாற்றம் (%) | 2022 சன-செத் | 2023 சன-செத் | ஆ-ஆ. மாற்றம் (%) |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏற்றுமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 150.3 | 135.2 | -10.0 | 154.5 | 138.9 | -10.1 |
| | அளவுச் சுட்டெண் | 146.2 | 161.9 | 10.7 | 163.3 | 166.8 | 2.2 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 102.8 | 83.5 | -18.7 | 94.6 | 83.3 | -12.0 |
| **இறக்குமதி** | | | | | | | |
| | பெறுமதிச் சுட்டெண் | 114.9 | 120.8 | 5.1 | 140.1 | 122.5 | -12.5 |
| | அளவுச் சுட்டெண் | 102.7 | 126.0 | 22.7 | 128.3 | 127.1 | -0.9 |
| | அலகுப் பெறுமதிச் சுட்டெண் | 111.9 | 95.8 | -14.4 | 109.2 | 96.4 | -11.7 |
| **வர்த்தக மாற்று விகிதம்** | | 91.9 | 87.2 | -5.1 | 86.7 | 86.4 | -0.4 |

(அ) தற்காலிகமானது
(ஆ) தானியங்கள், வெங்காயம், உருளைக்கிழங்குகள், அவரை வகை காய்கறிகள் மற்றும் ஏனையவற்றினை உள்ளடக்கியுள்ளது
(இ) ஐ.அ.டொ. நியதிகளில்